# சதாவதானி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்
# தம்பசெட்டி, பருத்தித்துறை.

இச்சங்கமானது 21.12.1985ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 36 வருடங்கள் நிறைவு பெறுகின்றது. சுமார் 20 அங்கத்தவர்களுடன் ஆரம்பித்த இச் சங்கம் இன்று பல்வேறுபட்ட வளர்ச்சிப்படிகளுடன் அபரிதமான முன்னேற்றத்துடன் புலோலி மேற்கு, புலோலி மத்தி ஆகிய இரு சேவையாளர்கள் பிரிவை உள்ளடக்கிய அங்கத்தவர்களாக சேர்ந்தவர்களுக்கு பல்வேறு விதமான வாழ்வாதார திட்டங்கள் சேவைகள் என்பனவற்றை வழங்கி யாழ் மாவட்டத்திலேயே முதன்மையான சங்கமாக சொந்தக் கட்டிடத்தில் பல இலட்சப் பெறுமதியான சொத்துக்களுடன் இயங்கி வருகின்றது.

தற்போது இச்சங்கம் 373 அங்கத்தவர்களோடு இயங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. வருடந்தோறும் பொதுக்கூட்டங்கள் கூட்டப்பட்டு புதிய இயக்குனர்சபை தெரிவு செய்யப்பட்டு சங்கம் நிறுவனமயப்படுத்தப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது,

சங்கமானது பல்வேறுபட்ட நல உதவித்திட்டங்களை முன்னெடுத்து சிறப்பாக செயற்படுத்தி வருகின்றது. அங்கத்தவர்களுக்கான கடன் உதவித்திட்டம், விவசாயிகளுக்கான பருவகால கடன்திட்டங்கள், மரணசகாய நிதி திட்டம், விபத்துநிதி திட்டம், மகப்பேற்றுநிதி, அங்கத்தவர்களுக்கான சேமிப்புக் க/கு, நிலையான வைப்புக் க/கு, நிலையான வைப்புக்கு எதிரான கடன் வழங்கல் போன்றவை எமது சங்கத்தால் கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கு வழக்குகளினூடாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றை செயற்படுத்த மூன்று அலுவலர்கள் கடமையாற்றுகின்றார்கள். வருடாந்தம் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களினால் சங்கக் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டு வருகின்றது. இந்த வகையில் 2019/ 2020ம் நிதியாண்டு காலத்திற்கு சங்கம் 609010/– தேறிய இலாபமாக பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச் சங்கத்தின் கடந்தகாலச் செயற்பாடுகளாக பின்வருவனவற்றை பதிவிட முடியும். தையல் பயிற்சி நிலையம் நடாத்தியமை, விவசாயக் கடன்வழங்க ஆரம்பித்தமை (1989) சதாவதானி கதிரைவேற்பிள்ளை கல்வி நிலையம், போர்க்கால சூழலில் விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு தானிய வகைகள், உரம், மண்ணெண்ணெய், இலகுவான கடன் அடிப்படையில் வழங்கியமை, நீர் இறைக்கும் இயந்திரங்களினை யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சமாசத்தின் ஊடாக பெற்று விவசாயிகளின் பயன்பாட்டிற்கு வழங்கியமை. (1990 – 1993) 2000ம் ஆண்டு சங்கத்திற்கான கட்டிடம் கட்டுவதனை நோக்கமாக கொண்டு மூன்று குளியுடன் கூடிய 1/2 பரப்புக் காணி ஒன்றினை சதாவதானி கதிரைவேற்பிள்ளை வீதியில் கொள்வனவு செய்யப்பட்டு மாடிக் கட்டிடம் ஒன்று ரூபா 15 இலட்சத்து ஐம்பத்தையாயிரம் ரூபா செலவில் 2002ம் ஆண்டு கட்டப்பட்டு இயங்கத் தொடங்கியது என்பதையும் பதிவிட விரும்புகின்றேன்.

இச் சங்கமானது புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்கள் ஆகியோரை கௌரவப்படுத்தி பரிசில்கள் வழங்கல், சங்க எல்லைப் பரப்பிற்குள் வதியும் முதியோரைக் கௌரவித்தல், சமூகச் சேவையாளர்களை கௌரவித்து சமூக சேவையாளர் விருதுகள் வழங்கல் போன்ற நற்பணிகளையும் 2006ம் ஆண்டில் இருந்து மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சங்கத்தின் சிறந்த செயற்பாடுகள் காரணமாக பல தடவைகள் எமது சங்கம் மாவட்ட, மாகாண ரீதியாக முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

2012ம் ஆண்டு தனது வெள்ளிவிழாவை சிறப்பாக கொண்டாடியதுடன் வெள்ளிவிழா மலர் ஒன்றினையும் வெளியிட்டு சங்கத்தின் செயற்பாடுகளை ஆவணப்படுத்தியுள்ளது என்பதோடு பொருளாதாரம், சமூகவியல், சம்பந்தமான சிறந்த கட்டுரைகளை துறைசார்ந்தவர்கள் எழுதியிருப்பதும் சிறந்த அம்சமாகும்.

இதனை அடுத்து சங்கத்தின் நிதிநிலைமையினை ஸ்திரப்படுத்தும் நோக்கில் இன்னொரு மைல் கல்லாக சங்கத்தில் சூரிய மின்கலத் (Solar) தொகுதி ஒன்றினை ரூபா 26 இலட்சம் செலவில் பொருத்தி மாதாந்தம் சராசரி வருமானமாக ரூபா 55 ஆயிரம் அளவில் பெற்றுக்கொள்ளவதற்கான திட்டத்தினை 2020ம் ஆண்டு பதவி வகித்த இயக்குனர்சபை முன்னெடுத்ததன் மூலம் சங்கம் மாதாந்தம் நல்ல வருமானத்தைப் பெற்று வருகின்றது என்பதையும் இவ்விடத்தில் பதிவிடல் பொருத்தமானது.

இவ்வாறாக , இச்சங்கத்தினை 1985ம் ஆண்டு ஆரம்பிக்க முன்நின்று உழைத்தும் தேவையான காலங்களில் தேவையான சிறப்பு நலத்திட்டங்களை அங்கத்தவர்களுக்காக உருவாக்கியும் செயற்பட்ட இயக்குனர் சபை, மற்றும் திட்டங்களுக்கு அனுமதி அளித்து ஊக்குவித்த கூட்டுறவுத் துறையினர் , சிக்கன கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினர் ஆகியோரை அகவை 37ல் கால் பதிக்கும் இத்தருணத்தில் நினைவு கூர்ந்து கொள்வது மிகவும் சிறப்பான விடயமாகும்.

க.தங்கராசா
(முன்னாள் தலைவர்)